**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, VIRUDHUNAGAR**

Sessions .. .. Sessions Case No. 121 of 2024

Deposition of witness for { Prosecution PW4
Defence
Court

Name : அசோக்குமார்
Father Name : பாண்டி
Village : கோயம்புத்தூர்
Taluk : கோயம்புத்தூர்
Caste :
Calling :
Religion :
Age : 43

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 23th day of February 2026.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை -**

**நான் தற்போது** கோயம்புத்தூர் மாநகர் போத்தனூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக **பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.06.2022 ம் தேதி காரியாபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது அன்று மாலை 16.30 மணியளவில் நான் மற்றும் முதல்நிலை காவலர் ரமேஷ்குமார் மற்றும் பெண் காவலர் ராஜேஸ்வரி ஆகியோருடன் குற்ற தடுப்பு மற்றும் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை தடுப்பு சம்பந்தமாக ரோந்து செல்லும் போது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி கே.செவல்பட்டி பஸ் நிறுத்தம் அருகே பெட்டி கடையில் புகையிலை பொருட்கள் வைத்து விற்பனை செய்வதாக கிடைத்தது. அது குறித்து சம்பவம் இடம் சென்று விசாரித்த போது சித்தையன் மனைவி ஆஜர் எதிரி மீனாட்சி என்பது தெரியவந்தது. எதிரியை**

நான் விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கணேஷ் புகையிலை 12 பாக்கெட் மற்றும் கூலிப் 15 பாக்கெட்டுகள் எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பொருட்கள் அரசால் தடைசெய்யப்பட்டது என்பதாலும் உணவு பொருளில் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்பதாலும் தக்க காரணம் கூறி எதிரியை கைது செய்தும் எதிரி ஆஜர் செய்த புகையிலை பொருட்களை அன்றைய தினம் 16.45 மணியளவில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினேன். மேற்படி அத்தாட்சியில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக கையொப்பம் முன்வராததால் என்னுடன் வந்த காவலர்கள் ரமேஷ்குமார் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர்கள் சாட்சியாக கையொப்பம் செய்ததனர். மேற்படி அத்தாட்சி **அ.சா.ஆ.3** ஆகும். மேற்படி எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.148/2022 சட்டப்பரிவுகள் 272. 273, 328 இ.த.ச. உடன் இணைந்த பிரிவு 24(1) COTPA ACT–ன் படி முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** பதிவு செய்தேன். பின்னர் அத்தாட்சி மற்றும் அசல் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை கனம் நீதித்துறை நடுவர் எண்.2 விருதுநகர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் மற்ற நகலை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பினேன். எதிரியை வயதானவர் மற்றும் பெண் என்பதாலும் உயர் அதிகாரியின் அனுமதியின் பேரில் தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். சாட்சிகள் ரமேஷ்குமார் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு சொத்துக்களை படிவம்–91 **அ.சா.ஆ.5** ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்வதற்காக சென்னை தடயவியல் துறைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கில் முதல் விசாரணை முடிந்து மேல் விசாரணைக்காக வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு ஒப்படைத்தேன். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொல்ல சொல்ல எழுத்தர் பழனி என்பவர் அத்தாட்சி எழுதினார். பழனி என்பவர் என் அழைப்பின் பேரில் என்னுடன் வந்தார். முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி மற்றும் சாட்சிகளின் வாக்கு மூலங்களில் பழனி என்னுடன் வந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் என்னுடைய கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியில் நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றும், பின்னிட்டு அத்தாட்சியில் ஏதோ ஒரு சந்தர்பத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எதிரிக்கு வழங்கப்பட்ட அத்தாட்சியில் எனது கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. படிவம்–91ல் நான் தான் தயார் செய்தேன். 13.12.2022ம் தேதி படிவம்–91 யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்ட அன்று முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி மற்றும் படிவம்–91 ஆகியவற்றை நீதிமன்ற காவலர் சிவபாலன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். நீதிமன்ற காவலரிடம் மாலை நேரத்தில் அன்றைய தினம் நீதிமன்ற நடவடிக்கை குறித்து வழக்கமாக கேட்பேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் படிவம்–91–யை நீதிமன்றத்தில் ஒப்படைத்தது குறித்து கேட்டேனா என்றால் அவ்வாறு குறிப்பிட்டு கேட்டதாக ஞாபகம் இல்லை. நீதிமன்ற காவலரிடம் முதல் தகவல் அறிக்கை, அத்தாட்சி மற்றும் படிவம்–91 ஆகியவற்றை சம்பவத்தன்று கொடுத்து அனுப்பவில்லை என்றும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. படிவம்–91ல் நீதிமன்றத்தில் 13.12.2022ம் தேதி பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் நான் சொன்னது போல் எதிரியிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்பதால் தான் வழக்கு சொத்துக்கள் 6 மாத காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது என்றால் சரியல்ல.

வேறு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை பின்னிட்டு இவ்வழக்கில் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் இருந்து ரோந்திற்கு வந்தபோது எனக்கு ரகசிய தகவல் கிடைத்தது. நானும், நிலைய எழுத்தர் பழனி என்பவரும் ஒரு இரு சக்கர வாகனத்தில் சென்றோம். அ.சா.1 மற்றும் அ.சா.2 தனித்தனி வாகனத்தில் வந்தனர். சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் சுமார் 1.கி.மீ இருக்கும். அருப்புக்கோட்டை மெயின்ரோட்டில் எதிரியின் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் பொது மக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தை சுற்றி கடைகள் ஏதுமில்லை. எதிரியை கைது செய்தபோது 10, 15 நபர்கள் கூடினார்கள் என்றால் ஞாபகமில்லை. பொது மக்களை சாட்சியாக இருக்க நான் கேட்டேனா என்றால் சம்பவ இடத்தில் தனிநபர்கள் யாருமில்லை. எதிரியை சம்பவ இடத்தில் பெண் காவலர் மூலம் சோதனை செய்யவில்லை. நிலையம் வந்து சோதனை செய்தோம். புகையிலை பொருட்கள் விற்ற பணம் ஏதுவும் கைப்பற்றவில்லை. பெட்டி கடையில் பொருட்கள் வாங்குவதற்கு நாங்கள் சென்றபோது யாரும் வரவில்லை. சம்பவ இடத்தில் கைப்பற்றிய பொருட்களின் விபரப்பட்டியல் தயார் செய்யவில்லை. அத்தாட்சி மட்டும் தயார் செய்தேன். புகையிலை உட்கொண்டதால் பொது மக்கள் பாதிக்கப்பட்டதாக புகார் யாரும் கொடுக்கவில்லை. நான் கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் பேக்கிங் செய்யப்பட்டது என்றால் சரிதான். பேக்கிங் பிரிக்கப்பட்ட நிலையில் புகையிலை கைப்பற்றவில்லை. வழக்கை மிகைப்படுத்துவதற்காக உணவுப் பொருளில் கலப்படம் செய்யப்பட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் தேதி, நேரம் மற்றும் இடத்தில் ரோந்துக்கு குழுவுடன் செல்லவில்லை என்றும் எதிரியை கைது செய்து வழக்கு சொத்துக்கள் அத்தாட்சியில் கைப்பற்றப்படவில்லை என்றும் பின்னிட்டு வேறு வழக்கில்

கைப்பற்றப்பட்ட சொத்துக்களை வைத்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் எதுவும் நான் தயார் செய்யவில்லை. தானாக முன்வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் வழக்குகளில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் எதுவும் தயார் செய்யமாட்டோம். நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல.